

நிர்வாண நங்கை - மத்தீஸ்



நாற்காலியில் பெண் - பிகாசோ

# புனித நிர்வாணம்

இந்திரன்

மனித உடம்பு ஆடை கலைந்து நிற்கிறபோது கூச்சம் வருகிறது; அருசை அடைகிறது. ஆனால், கலைஞனை பொருத்தமட்டில் அது ஒரு சொல். ஆற்றல், ஒத்திசைவு, பரவசம், சோகம் என்று பல்வேறு உணர்ச்சிகளைக் காட்டுவதற்கு உகந்த ஒரு குறியீடுதான் உடம்பு. கிரேக்கர்களின் பளிங்குச் சிற்பங்களிலிருந்து, தென்னாட்டு வெண்கலச் சிற்பங்கள் வரை மனித உடம்பை ஆராதித்து வந்திருக்கின்றன.

ஆனால், நிர்வாண உடம்பு பொதுவிடத்தில் பார்வைக்கு வருவது ஒப்புக்கொள்ளக்கூடியதா? கலைஞர்கள் ஏன் எப்போதும் அதைக் கட்டி அழுகிறார்கள்? நிர்வாணம் ஆபாசம் இல்லையா?


NAKED என்றும் NUDE என்றும் இருக்கும் இரு வார்த்தைளும் ஒரே அர்த்தம் கொண்டவை தான். ஆனாலும், இரண்டும் வெவ்வேறு வண்ண வேறுபாடு கொண்டவை. வேறு வேறு தொனிப்பொருளைக் கொண்டுள்ளவை. NAKED என்பது சங்கடத்தைக் கொடுக்கும் ஆடை களைந்த உடம்பின் நிலை. NUDE என்பது சகஜபாவத்திலிருக்கிற, தன்னம்பிக்கையோடு கூடிய சமநிலையிலிருக்கிற ஒரு உடம்பின் நிலை. ஓவியர்களும், சிற்பிகளும் இந்த சகஜபாவத்திலுள்ள நிர்வாணத்தைத் தான் தங்கள் படைப்பில் கையாள்கிறார்கள். இங்கே, வசதி கருதி NAKED என்பதை 'நிர்வாணம்' என்றும் NUDE என்பதைப் 'புனித நிர்வாணம்' என்றும் வைத்துக்கொள்ளலாம்.

தமிழர்கள் நிர்வாணத்தை அசூசையாகக் கருதியதில்லை என்று சிலர் சொல்லக்கூடும். இது பாதி அளவுதான் உண்மை. சீனர்களும், ஜப்பானியர்களும் போன்று தமிழ்க்கலைஞர்களும் தங்கள் படைப்புகளில் பிறப்பு உறுப்புகளைக் காட்டக் கூசி இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை. இது அந்தந்த பண்பாட்டு ரீதியாகக் கட்டமைக்கப்பட்டது.

நமது மரபான கலைப்படைப்புகள் மேலாடை தவிர்த்த நிலையில் இருப்பவைதான். திண்தோள் ஆண்களும், திரண்ட முலைப் பெண்களும் இங்கு கலைப்படைப்புகளில் சகஜம். ஆனால், இடை என்றும் மூடியே இருக்கும். கிரேக்கப்படைப்புகளைப் போன்றோ, மைக்கேல் ஏஞ்சலோவின் 'டேவிட்' சிற்பத்தைப் போன்றோ, பிறப்பு உறுப்புகளோடு நிற்பவை அரிது. இடையில் கண்ணாடி போன்ற மெல்லிய ஆடை அணிவிக்கப்பட்டு, அது உடம்போடு ஒட்டி இருப்பது போல படைத்து, உடம்பின் மொழியைப் பயன்படுத்துவதில் நமது மரபுக் கலைஞர்கள் அசகாயசூரர்கள்.

ஆதாமையும், ஏவாளையும் படைத்த மேல் நாட்டு ஓவியர்கள் ஃபிக் (Fig) இலை ஒன்றைப் பயன்படுத்தி, மூட வேண்டியவைகளை மூடிவிடத் தான் செய்திருக்கிறார்கள். பல நேரங்களில் முதல் மனிதன் ஆதாமின் தொப்புள் பகுதியைக்கூடச் செடிகொடிகளினால் மறைத்துவிட்டார்கள். இதனாலேயே ஸ்டீஃப்பன் ஜே கௌல்ட் (Stephen Jay Gould) என்னும் ஹார்வர்ட் விஞ்ஞானி பைபிள் கதைப்படி, ஆதாம் ஒரு தாயின் வயிற்றிலிருந்து பிறக்காத காரணத்தால், ஆதாமுக்குத் தொப்புள் கொடியோ, தொப்புளோ இருந்ததா? என்று வேடிக்கையாக கேள்வி எழுப்பினார்.


தமிழகத்தின் கதை வேறு. சமண, பௌத்த தீர்த்தங்கர்களையும், திகம்பரர்களையும் தவிர்த்துப் பார்த்தால் நிர்வாண நிலையைப் புராணங்களின் கதை காரணமாகத் தேர்ந்தெடுத்தார்களே தவிர, மேல்நாட்டைப்போல் அழகியல் காரணத்துக்காகத் தேர்ந்தெடுக்கவில்லை. மோகினி, பிட்சாடனமூர்த்தி போன்ற சிற்பங்கள் திகம்பர நிலையிலும்; ஆடை துறப்பினும் அணிகலன் துறப்பதில்லை. ஸ்ரீரங்கம் கோயிலில் திகம்பர நிலையிலுள்ள மோகினியைப் பார்க்க முடியும். இப்படி இச்சிற்பத்தைப் படைப்பதற்கு மேல்நாட்டைப்போன்ற அழகியல் காரணங்கள் ஏதும் கிடையாது. புராணம் அப்படிப் பேசுகிறது. தாருகாவனத்து ரிஷிகளின் அகந்தையை அடக்க விஷ்ணு, மோகினி அவதாரம் எடுத்து வருகிறார். ரிஷிகளின் தவத்தைக் கலைக்க வேண்டும் என்றால் சும்மாவா? அதனால்தான் ஆடை களைந்து வருகிறாள் மோகினி. இதேபோன்றுதான் சிவன், ரிஷிபத்தினிகளின் கொட்டத்தை அடக்க பிட்சாடனமூர்த்தியாக வருகிறார். இதனால்தான் திகம்பரகோலம். செப்புத் திருமேனிகளில் காளிங்கநர்த்தன கண்ணனுக்கும், திருஞானசம்பந்தருக்கும் திகம்பர



கிளியும் பெண்களும் - எஸ்.கே. ராஜவேலு

நிலை உண்டு. இவர்கள் குழந்தைகள்தானே போகட்டும் என்று விட்டுவிட்டார்கள். எனவே உடற்கூற்றியலை கரைத்துக்குடித் தவர்கள், வெண்கலச் சிற்பங்களைச் செய்கிற - இன்றைக்கும் சுவாமிமலை பக்கம் போனால் பார்க்கலாம் - சிற்பிகள்கூட நிர்வாணக் கோலத்தைக் கைக்கொள்வதில்லை. இவர்களின் மரபிலேயே வந்த தமிழகத்து நவீன சிற்பிகளில் மிக முக்கியமானவரான வித்யா ஷங்கர் ஸ்தபதிகூட இதைக் கைக்கொள்வதில்லை.

ஒரு தாமரை மலரை ஒரு அன்னப் பறவையை அழகியல் ரீதியாக அனுபவிப்பது போல, ஆடை களைந்த நிர்வாண உடம்பை அழகியல் ரீதியாக அனுபவிப்பது என்பது தமிழ்நாட்டில் மட்டுமல்ல; சீனாவிலும் ஜப்



கூந்தல் உலர்த்தும் நிர்வாண நங்கை

பானிலும்கூட இல்லாத ஒன்றுதான். ஜப்பானிய அச்சுப்பதிவுகள் சிலவற்றில் அம்மண வடிவங்கள் இடம்பெற்றிருக்கின்றன. அவை கலை என்ற அந்தஸ்தில் செய்யப்பட்டவை அல்ல என்று ஜப்பானிய கலை வரலாற்றாசிரியர்களே மறுக்கிறார்கள்.

கலையில் புனித நிர்வாணம் என்பதை மதிக்கிறவர்கள் இத்தாலியர்கள். இத்தாலியர்களைப் பார்த்து ஜெர்மனியர்களும் புனித நிர்வாணத்தை ஏற்றுக்கொண்டார்கள்.

நிர்வாண உடம்பு என்பதை சிற்பிகளும், ஓவியர்களும் தங்களது தூரிகையினாலும், உளியினாலும் மேலும் அழகடையச் செய்யப்பட வேண்டிய ஒன்று என்று கருதினார்கள். அரிஸ்டாடில் ஒருமுறை சொன்னார். "இயற்கையினால் செய்து முடிக்க முடியாத அழகின் இலட்சியங்களைக் கலை செய்து முடிக்கிறது". புனித நிர்வாணத்தைக் கொண்டாடியவர்கள் இதை நோக்கித்தான் பயணம் செய்தார்கள்.

கலையின் தொடக்க நாட்களில், எல்லா மனித உடம்பும் முழுமையான அழகை அடைந்தவை அல்ல என்பதால், பல்வேறு மனித உருவங்களிலிருக்கும் மிகச்சிறந்தவற்றை எல்லாம் இணைப்பதன் மூலமாக இயற்கை செய்யத் தவறிய முழுமையை நாம் அடைய முடியும் என்று கலைஞர்கள் கருதினார்கள். உலகப் புகழ்பெற்ற 'வீனஸ்' எனும் அழகு தேவதையின் சிலையை வடித்த ப்ளினி சொல்கிறார். "க்ரோடோ நகரிலிருந்த ஐந்து உன்னதமான அழகிகளின் மிகச் சிறந்த உடற்பயிற்சிகளை இணைத்து வீனஸை படைத்தேன்".

ஒருகாலகட்டத்தில் மனித உடம்பை இலட்சிய முறைப்படி சமைப்பதற்கு கணிதம் பயன்படும் என்று கிரேக்கர்கள் கருதினார்கள். மனித உடம்பின் அளவை கணித ரீதியாக வரையறுத்து இயற்கையில் காணக்கிடைக்காத அழகை அடைய முடியும் என்று நினைத்தார்கள். பின்னாளில் ஜியோமிதியைப் பயன்படுத்தினார்கள். இந்தியாவின் சிற்ப சாஸ்திரங்கள் மனித உடம்பை தெய்வ வடிவங்களாக உயர்த்துவதற்கு பல்வேறு அளவுகளை உருவாக்கின.

நமது சிற்பங்களை உருவாக்கும் அளவுகளை 'அணு' என்பதிலிருந்து தொடங்கியுள்ளோம். 8 பரமாணு கொண்டது ஒரு தேர்த்துகள், 8 தேர்த்துகள் ஒரு மயிர்நுனி, 8 மயிர்நுனி அகலம் ஒரு ஈர், 8 ஈர் ஒரு பேன், 8 பேன் ஒரு நெல், 8 நெல் ஒரு விரல். ஆனால், இவ்வளவு துல்லியமான அளவுகோல்கள் இருந்தபோதிலும் இவற்றையும் மீறி ஒவ்வொரு சிற்பியும், ஒவ்வொரு ஓவியனும் தனக்கேயான முத்திரையைப் பொறித்தனாலேதான் இவர்களின் கலை சிறக்கிறது.

உமையொருபாகன் என்று ஆணும், பெண்ணும் சமவிகிதத்தில் கலந்து, உலகிலேயே உன்னதமான கலைச் சாதனை படைத்த தமிழர்கள், தீர்மானமான இலக்கணங்கள் மட்டுமே போதுமானவை அல்ல என்பதைப் புரிந்திருந்தனர். அரை நிர்வாண வடிவங்களிலும் மனித உடம்பின் அழகைத் தங்கள் கலையின் உதவியால் சிறப்பித்தனர்.

ஐரோப்பிய உலகின் மகாகலைஞன் மைக்கேல் ஏஞ்சலோவும் கூட இதை வேறு விதமாகப் புரிந்திருந்தார். புனித நிர்வாணத்தின் எல்லைகளைத் தொட்ட 'டேவிட்' எனும் ஆணழகனைப் படைத்த மைக்கேல் ஏஞ்சலோ சொன்னான்: 'ஒரு கட்டடத்தைப்போல, நிர்வாண வடிவம் என்பது இலட்சியமான ஒரு தேடலுக்கும், செயல்பாட்டு ரீதியான தேவைகளுக்கும் இடையிலான ஒரு சங்கமம்தான்.'


19-ஆம் நூற்றாண்டில் நிர்வாண வடிவங்களுக்கான மரத்துப்போன இலக்கணங்கள் அர்த்தமற்றுப்போன குறியீடுகளாக மாறிப் போயின. கலை வரலாற்றின் காலப்போக்கில் நிர்வாண உடம்பை ஒவ்வொரு பகுதியாகப் பிரித்து அறிவுபூர்வமாக ஆராய்வது என்கிற போக்கு செல்வாக்கிழந்தது. நிர்வாண உடம்பை முழுமையாகக் கிரகித்து, அதன் சாரமாக எது இருக்கிறதோ அதையே ஒரு கலைப்படைப்பாகச் செய்யும் போக்கு எழுந்தது.

1907-ல் தீட்டப்பட்ட இரண்டு முக்கிய ஓவியங்கள் இருபதாம் நூற்றாண்டுக் கலையின் தொடக்கமாக அமைந்தன என்று சொல்லலாம். இரண்டுமே நிர்வாண ஓவியங்கள். ஒன்று: பிகாசோ தீட்டிய 'ஆவிக்னான் நங்கையர்' (Les Domoiselles d' Avignon).இரண்டு: மத்தீஸ் தீட்டிய 'நீல நிர்வாண நங்கை' (Le Nu blen).

நிர்வாண மனித உடம்பு குறித்து கலைப் பள்ளிகள் கற்றுக்கொடுத்தவற்றை இம்ப்ரஷனிசம் ஏற்கெனவே உதறித்தள்ளிவிட்டது. பிகாசோவும் சரி, மத்தீஸூம் சரி இம்ப்ரஷனிசம் உட்கிடையாகக் கொண்டிருந்த கோட்பாட்டையே மறுதலித்தனர். ஓவியன் இன்னமும் ஒரு துல்லியமான புகைப்படக்காரனாக இருக்க முடியாது என்று மறுத்தனர். இருவருமே நிர்வாண வடிவத்தை போதுமான வன்முறையுடன் கையாண்டனர். தற்காலத் தமிழக ஓவியர்களில் சந்ருவிடமும், நடேஷிடமும் நான் இதைக் காண்கிறேன்.

நிர்வாண வடிவத்தை எதிர்கொண்டதில் பிகாசோவும், மத்தீஸூம் முரண்பட்டவர்கள்தான். மத்தீஸைத் தொடர்ந்து தொந்தரவு செய்து கொண்டிருந்தது, நிர்வாண உடம்பை எவ்வளவுக்கெவ்வளவு எளிமைப்படுத்தலாம் என்பதுதான். பிரெஞ்சுக் கவிஞன் பால்வெலெரி கவிதையில் எதைக் கையாண்டானோ அதையே மத்தீஸ் கையாண்டார். 'தூய சித்திர வடிவங்களை' (Pure Pictorial Forms) உருவாக்க மத்தீஸ் நிர்வாண நங்கை வடிவத்தையே தேர்ந்தெடுத்தார்.

தமிழகத்தில் நிர்வாண வடிவங்களின் எளிமை நோக்கிப் பயணப்படுபவர்களில் மிக முக்கியமானவர் எஸ்.கே. ராஜவேலு. இவரது புனித நிர்வாணப் பெண் வடிவங்கள், தமிழ் அழகியல் பாரம்பரியமும், மேல்நாட்டு நவீன அழகியலும் கொண்டவை. இந்தவிதத்திலும் கூட இவர் மத்தீஸைப் பெரிதும் ஒத்திருக்கிறார். சோழ மண்டல ஓவியர் கே.வி. ஹரிதாஸின் நிர்வாண நங்கையரையும் இந்த வகையிலேயே சேர்க்க வேண்டும். பிகாசோ நிர்வாண வடிவங்களோடு பாசமும், வெறுப்பும் கலந்த ஒரு உறவைக் கொண்டிருந்தார். 'ஆவிக்னான் நங்கையர்' ஓவியத்தின் மூலமாக காலம் காலமாக எது அழகு என்று நம்பப்பட்டதோ



நிர்வாண மனிதன் - சந்ரு



பெண் - கே.வி.ஹரிதாசன்

அதற்குப் பதிலடி கொடுத்தார். நிர்வாண உடம்பை வரையறுப்பதில் முற்றிலும் புதிதான ஒரு முறையைக் கொண்டு வந்தார் - எதற்கும் உயிர் கொடுக்கும்திறமை கொண்ட பிகாசோவால் கியூபிச வடிவிலான நிர்வாண பெண்களுக்கும் உயிர்கொடுக்க முடிந்தது. உதாரணமாக, 'நாற்காலியில் பெண்' எனும் ஓவியத்தைச் சொல்லலாம். பிகாசோ தனது நிர்வாணப் பெண் வடிவங்களைச் சிதைத்தார். இரண்டு பெண்களை இரண்டு ரொட்டித் துண்டுகளைப் போல மாற்றினார்.

சந்ருவின் நிர்வாண மனிதனின் 49 சித்திரங்களைப் பார்க்கிறவர்கள் இதனை நன்கு உணர முடியும். மனித உடல் கூற்றியலை நன்கு பயின்றிருக்கிற சந்ரு, அதைத் தனது மனோலயப்படி பல்வேறு உருத்திரிபுகளுக்கு ஆளாக்குகிறார். நிர்வாண வடிவம் தனது அடையாளத்தை இழந்து, புனித நிர்வாண வடிவத்தை அடைகிறது. தற்கால கலையின்படி நிர்வாண மனித வடிவம் என்பது தன்னைத்தானே அடையாளம் தெரிந்து கொள்ள முடியாத அளவுக்கு, உருமாற்றிக் கொள்வதன் மூலமாக, புனித நிர்வாணம் என்கிற நிலையை அடைகிறது.

ஆடை களைந்து நிற்கிற தனது உடம்பை மேலும் புதிய முறைகளில் வரையறுத்துக் கொள்வதன் மூலமாக மனிதன் நிர்வாணத்தின் எல்லைகளை விரிவுபடுத்துகிறான். உடலின் சாரத்தைக் கண்டடைகிறான். நிர்வாணத்தைப் புனித நிர்வாணமாக கௌரவப்படுத்துகிறான். ●